# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 15370 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 24.09.09.</u>**

முன்னிலை : திரு.தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,
மாநில தகவல் ஆணையர்

மனுதாரர் : திரு. ஏ.எஸ். காந்தி,
த/பெ. எஸ். சாம்பசிவம்,
3/84, பழையகரம்,
ஆயக்காரன்புலம்–1 அஞ்சல்,
வேதாரண்யம் வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம் – 614 707.

பொது அதிகார அமைப்பு : பொதுத் தகவல் அலுவலர்,
பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் அலுவலகம்,
DPI காம்பிளக்ஸ்
நுங்கம்பாக்கம்,
சென்னை– 600 006.

------

மனுதாரர் 22.09.09 அன்று தந்தி மூலம் தம்மால் விசாரணைக்கு வர இயலவில்லை என தெரிவித்துள்ளார். திரு. எஸ். கே. இராமலிங்கம், பள்ளிக் கல்வி இயக்குநரின் நேர்முக உதவியாளர், சென்னை இவ்வாணையத்தில் இன்று (24.09.09) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தார்.

மனுதாரர் 26.02.09 அன்று பொதுத் தகவல் அலுவலர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச்செயலகம், சென்னை–9 அவர்களிடம் தகவல் கேட்டு மனு செய்துள்ளார். மனுதாரரின் மனு பள்ளிக் கல்வித் துறை, தலைமைச்செயலகத்தில் இருந்து சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர், பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு மனுதாரர் கோரிய தகவல் அளிக்குமாறு 05.03.09 அன்று அனுப்பப்பட்டுள்ளது. 25.03.09 அன்று மனுதாரருக்கு தகவல்கள் தரப்பட்டுள்ளன. தரப்பட்ட தகவல் குறித்து 13.04.09 அன்று மேல்முறையீடு செய்துள்ளார். மனுதாரருக்கு 29.05.09 அன்று மீண்டும் தகவல் தரப்பட்டுள்ளது. 09.06.09 அன்று மனுதாரர் மீண்டும் மேல்முறையீடு செய்துள்ளார். தகவல் கிடைக்காததால் 07.07.09 அன்று இவ்வாணையத்திற்கு மேல்முறையீடு செய்த மனு இன்று (24.09.09) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணைக்கு மனுதாரர் வர இயலவில்லை என்று இவ்வாணையத்திற்கு தந்தி மூலம் தெரிவித்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரிடம் மனுதாரரால் கேட்கப்பட்ட தகவல் குறித்தும், மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட தகவல் குறித்தும் விசாரிக்கப்பட்டது. மனுதாரரின் 26.02.09 தேதியிட்ட மனுவில் ஒரு குறிப்பிட்ட நபர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து கேட்டுள்ளார். மனுதாரருக்கு விசாரணைக்கு ஆணையிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் 13.04.09 நாளிட்ட மனுவில் விசாரணை ஆணை கேட்டும், அதிகாரியின் பெயர் கேட்டும், விசாரணை முடிக்கப்பட்டதா என்பது குறித்தும், நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம் குறித்தும் கேட்டுள்ளார். விசாரணை முடியாத நிலையில் தகவல் உரிமைச் சட்டப் பிரிவு 8(1)(h) –ன் கீழ் விலக்களிக்கப்பட்ட அம்சமாக உள்ளதால் தகவல் அளிக்கவில்லை என்று மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் 09.06.09 அன்று மேல்முறையீட்டில் மனுதாரர் கோரிய தகவல் தர மறுப்பது தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி தவறானது என்ற தெரிவித்துள்ளார். மனுதாரருக்கு மீண்டும் விசாரணை

நடைபெற்று வருவதால் தகவல் உரிமைச் சட்டப் பிரிவு 8(1)(h)–ன் கீழ் விலக்களிப்பட்டு உள்ளதால் தகவல் அளிக்க இயலவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் இவ்வாணையத்திற்கு 07.07.09 அன்று அளித்த மேல்முறையீட்டில் பிரிவு 8(1)(h)–ன் கீழ் விலக்களிக்கப்பட்ட இனமாக இருப்பதால் தகவல் அளிக்க இயலாது என்று பொதுத் தகவல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது தவறு என்றும், சட்டப்படி தகவல் கொடுத்து இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரிக்கப்பட்டது. மனுதாரர் கேட்டுள்ள தகவல் ஒரு குறிப்பிட்ட நபரின் மீது விசாரிக்கப்பட்டு வரும் புகார் குறித்த தகவலாகும். பொதுத் தகவல் அலுவலர் ஆரம்ப நிலை விசாரணை மட்டும் நடைபெற்று உரிய ஆவணங்களுடன் அரசுக்கு 30.04.09 அன்று அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அரசு இது குறித்து மீண்டும் விரிவான விசாரணை தேவைப்படுவது குறித்து பொதுத் தகவல் அலுவலருக்கு எந்தவித தகவலும் அனுப்பவில்லை. பொதுத் தகவல் அலுவலர் கூற்றுப்படி ஒரு குறிப்பிட்ட நபரின் மீது விசாரணை செய்து விரிவான அறிக்கை அனுப்பப்பட்டுள்ள விவரங்கள் தகவல் உரிமைச் சட்டப்படி வெளியிடப்படின் மேல் விசாரணை செய்யப்படுவது பாதிக்கும் என்பதாலும், இதனால் வேறு விளைவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாலும் தகவல் உரிமைச் சட்டப் பிரிவு 8(1)(h) –ன் கீழ் தகவல் மறுக்கப்பட்டதாக தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தது போல் ஒரு குறிப்பிட்ட நபர் மீது விசாரணை செய்யப்பட்டு மேல் அலுவலருக்கு அனுப்பப்பட்ட அறிக்கை தகவல் உரிமைச் சட்டப் பிரிவு 8(1)(h) –ன் கீழ் புலனாய்வு நடவடிக்கைகளை அல்லது குற்றவாளிகளை கைது செய்தல் அல்லது அவர்கள் மீது குற்றவழக்குத் தொடர்தலைத் தடை செய்யக்கூடுமோ அந்தத் தகவலாக வரவில்லை என்று இவ்வாணையம் முடிவு செய்கிறது. மனுதாரர் கேட்டுள்ள விசாரணை அறிக்கை அலுவலக நடைமுறையில் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை குறித்த அறிக்கையாக

எடுத்துக்கொள்ளப்பட்டு பொது ஆவணமாக கருதப்பட்டு மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டும் என்று முடிவு செய்து கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

மனுதாரருக்கு ஒரு குறிப்பிட்ட நபரின் மீது விசாரிக்கப்பட்ட விசாரணை அறிக்கையை இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வாரத்திற்குள் அளித்து அதன் விவரத்தை பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 30.09.09
ஆணையத்தின் ஆணைப்படி

தமிழ்நாடு தகவல் ஆணையம்

( சு. மோகன தாஸ் )
உதவி பதிவாளர்

வழக்கு எண். 15370/09

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்,
பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் அலுவலகம்,
DPI காம்பிளக்ஸ்
நுங்கம்பாக்கம்,
சென்னை– 600 006.

திரு. ஏ.எஸ். காந்தி,
த/பெ. எஸ். சாம்பசிவம்,
3/84, பழையகரம்,
ஆயக்காரன்புலம்–1 அஞ்சல்,
வேதாரண்யம் வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம் – 614 707.